பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 3 (16—3—58) சனி ★ வெளியூர்: பங்குனி 4 (17—3—68) ஞாயிறு [இதழ்: 229

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்பும் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஒர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

பஸ் தொழிலாளர் நலனில் அரசு காட்டும் அக்கறை

நிதி நெருக்கடி நிலையிலும் பல சலுகை—வசதிகள்

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, மார்ச் 16—

இன்று சட்டமன்றத்தில், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மோட்டார் வண்டிச் சட்டங்கள்— நிர்வாகத்துக்கு ரூ. 31,64,200; சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்காக ரூ. 13,96,02,500; சாலைப் போக்குவரத்து முதலீட்டுச் செலவுகளுக்காக ரூ. 2 30,00,000 மானியங்களாக ஒதுக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து பல்வேறு புள்ளிவிவரங்களும் அடங்கிய உரை நிகழ்த்தினர்.

நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள அரசுப் போக்குவரத்துத்துறை இயங்கும் விதம், அரசு மேற்கொண்டுள்ள புதிய தடங்கள்— மேற்கொள்ளவிருக்கும் தடங்களின் எண்ணிக்கை, அரசுடைமையாக்கும் கொள்கையால் பாதிக்கப்பட்டோருக்கு மாற்று வசதிகள்—கட்டண மாறுதல்—அதற்கான காரணங்கள், பயணிகளுக்கான வசதிகள் ஆகியவற்றை எடுத்துரைத்த அமைச்சர், அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுவந்த—புதிதாக அளிக்கப்பட்ட வசதிகளையும், அவர்கள் நலனில் அரசு காட்டிவரும் அக்கறையையும் தெளிவாக விளக்கினர்.

தொழிலாளர்தம் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட முடியாமைக்கு இருக்கின்ற காரணம் நிதிப் பற்றுக்குறையே என்பதையும், நிதிநிலை சீர்படும் நேரத்தில் கோரிக்கைகளும் நிறைவேற்றி வைக்கப்படும் என்பதையும் அவர் தெள்ளத்தெளிய விளக்கினர். அவர் மேலும் கூறியதாவது:—

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

தமிழக அரசுப் போக்குவரத்துத்துறை தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களைக் கட்டித் தருவதற்காகத் தண்டையார்பேட்டையிலும், குரோம்பேட்டைக்கு அண்மையிலுள்ள நெமிலிச்சேரி கிராமத்திலும், நாகர்கோயிலில் நீண்டகரை கிராமத்திலும் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் நலனுக்காக இந்த இடங்களில், எல்லா வசதிகளுடன் குறைந்த செலவில் குடியிருப்புகள் கட்டித் தருவது பற்றி இத்துறை, மும்முரமாக ஆய்வுசெய்து வருகிறது.

துயர் தணிப்புக் கருணை நிதி

ஊழியர்களின் ஈமச் சடங்குகளுக்காகும் செலவைச் சரிக்கட்டுவதே இந்த நிதியின் நோக்கமாகும்.

மேலும், பெரும் விபத்துக்குள்ளான ஊழியர்களின் உடனடியான செலவுக்குப் பணம் வழங்கவும், போக்குவரத்துத்துறைப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிய ஏழைகளுக்கு—ஆதரவற்றவர்களுக்கு—அல்லது அவர்களது குடும்பத்தினருக்குப் பணம் வழங்கவும் இந்த நிதியிலிருந்து தொகை பயன்படுத்தப்படுகிறது.

வேலையிழந்தோருக்கு வேலை வாய்ப்பு

பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் கொள்கையினால் தனிப்பட்ட பேருந்து உரிமையாளர்களிடம் பணியாற்றியவர்கள் பலர் வேலையிழக்க நேர்ந்தது; அங்ஙனம் வேலையிழந்தவர்கள் இன்றியமையாத தகுதிகளைப் பெற்றிருந்து அவர்கள் போதிய ஆதாரங்களுடன் போக்குவரத்துத் துறைக்கு விண்ணப்பித்துக் கொள்வார்களேயானால், அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இவ்வரசு ஆணையிட்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இத்தொழிலாளர்கள் பதிவு செய்யவேண்டிய தேவையில்லை; அவர்கள், 'நேரிடையாகவே விண்ணப்பித்துக் கொள்ளலாம்' என்ற சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு போக்குவரத்துத் துறையில் வேலையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 253 ஆகும்.

தொழிலாளர்கட்கு வழங்கப்படும் பணி நலன்கள்

தொழிலாளர்கள் திறம்படவும் மனநிறைவுடனும் பணியாற்றுவதற்கு ஏதுவாக அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதில் அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது; இந்நோக்கத்துடன், ஆய்வு ஆண்டில் பணமாகவும் வசதிகள் செய்துதருவதன் மூலமும் அவர்களுக்குப் பல்வேறு நலன்கள் செய்து தரப்பட்டுள்ளன; அவை சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன:—

இம்மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப் படி வீதங்கள் 1-11-67 முதல் அதிகரிக்கப்பட்டன; இந்த அதிகரித்த வீதங்கள், இம்மாநில அரசாங்கப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்துவனவாகும்.

உயரிய அகவிலைப் படி வீதம் காரணமாகத் தமிழ்நாடு போக்குவரத்துத் துறையினருக்கு அதிகப்படியான செலவு தோராயமாக ஓராண்டிற்கு ரூ. 19 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகரிலுள்ள எல்லா ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப் படி அளிக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் அன்றாட ஊதியம் பெறுபவர்கள் உட்பட, அதில் பணியாற்றும் சென்னை மாநகர் தொழிலாளர்கள் அனைவருக்கும் இச்சலுகை பொருந்தும். 1—10—67 முதல் ஈட்டுப் படி அளிக்கப்படும். சில நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த ஈட்டுப் படி சம்பளத்தில் 8 சதவீதம், 10 சதவீதம் என்று கணக்கிடப்படும்.

தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு, இதற்காக ஏற்படும் அதிகரித்த செலவு ஆண்டுக்கு ரூ. 9 இலட்சம் ஆகும்.

சென்னை, கன்னியாகுமரிக் கிளைகளின் பணிமனைகளிலுள்ள பேருந்துகளைப் பேணுவதற்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பு ஊதியம் வழங்குவதற்குத் திட்டமுள்ளது. 1—10—66 முதற்கொண்டு தொழிலாளர்கள் ஒரு திங்களில் ஈட்டக்கூடிய அதிக அளவு நலன்கள் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

குரோம்பேட்டை பணிக் களரியிலும், இராணித்தோட்டம் பணிக் களரியிலும் மேற்சொன்ன இரண்டு பணிக் களரிகளின் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலைகளிலும் சேர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு உற்பத்தித் திறனின் அடிப்படையில் ஊக்கப் பூரிப்பு ஊதியம் வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அளிக்கத்தக்க பூரிப்பூதியத்தின் அதிக அளவு 1—10—66 முதற்கொண்டு ஒரு திங்களுக்கு 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு ஏறத்தாழ 100 சதவீதமாகும்.

வருகைப் பூரிப்பு ஊதியம் வழங்கும் திட்டம் தற்போது சென்னைக் கிளையின் போக்குவரத்து, தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்குப் பொருந்துகிறது. இப்பூரிப்பு ஊதியம் 1—10—66 முதல் மாநில அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிமனையின் தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த ஆணைகளின்கீழ் ஆண்டொன்றுக்குத் தொழிலாளர் ஒருவர் ரூ. 90 பெறுவார்.

பயிற்சியாளர்கள் சட்டத்தின்கீழ், இத்துறையில் பல பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித் தொகை 1—1—67 முதற்கொண்டு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 10 அதிக உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

பேருந்துத் தூய்மைப்படுத்தும் வேலை பயில்வோர் இத்துறையில் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். 1—4—67 முதல் அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் நாளொன்றுக்கு 50 காசுக்குக் குறையாமல் ஊதியம் உயர்த்தப்பட்டது.

இந்திய அரசின் தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் புரிபவர்களாகவும் ஆசிரியர்களாகவும் உள்ளவர்கள், தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்க துறை அளவில் பிரிவு பிரிவாகத் தொழிலாளர்களுக்கு வகுப்புகள் மேற்கொள்ள வேண்டும். அண்மைக் காலம்வரையில், அவர்களுக்குப் படி எதுவும் அளிக்கப்படவில்லை. தொழில் புரிபவர்களாகவும் ஆசிரியர்களாகவும் உள்ள ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் படி, 19—9—66 முதற்கொண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகளின் விதித் துறைகளின்கீழ் ஓய்வெடுத்துக்கொள்ளும் நாளில் அலுவல் மேற்கொள்வதற்கு மிகைநேர ஊதியம், அதிகப்படி ஊதியம் அளிக்கும் நலன்கள் குறைந்த பார வண்டிகள் ஓட்டும் வலவர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளன.

உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய மலைப் பகுதிகளைத் தலைமையிடங்களாகக் கொண்டுள்ள தொழிலாளர்களுக்குக் குளிர்காலப் படியை அண்மையில் அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத்துறையில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களும் குளிர்காலப் படி பெறத் தகுதியுடையவராவர்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஏப்ரல் 7-ல் அறிஞர் அண்ணா அமெரிக்கா புறப்பாடு

யேல் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பட்டம் பெறுவார்

அமெரிக்க அரசின் அழைப்புக்கிணங்க, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அடுத்தத் திங்கள் 7-ம் நாள் அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார்.

அண்ணா அவர்களுடன், முதலமைச்சரின் செயலாளர் கே. சொக்கலிங்கமும் செல்கிறார்.

அண்ணா அவர்கள் ஏப்ரல் 7-ம் நாள் சென்னையிலிருந்து புறப்படுகிறார்; 29-ம் நாள்வரை தங்கியிருப்பார்.

போர்ட்டோ ரிக்கோ, ஜப்பான், தைவான், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கும் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணா அவர்கள் தமது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் ஐந்து நாட்கள் 'யேல்' பல்கலைக் கழகத்தில் தங்குவார்; அப்போது அண்ணாவுக்கு ஒரு 'பெலோஷிப்' வழங்கிச் சிறப்புச் செய்கிறது—இந்தப் பல்கலைக் கழகம்.

'சப்' பெலோஷிப் என்பது பெயர்; சிறந்த தலைவர்களுக்கு இது வழங்கப்படுகிறது; இதனைப் பெறுவோர் பல்கலைக் கழகத்தில் பல விரிவுரைகள் நிகழ்த்துவர்.

அமெரிக்காவில் நியூயார்க் வாஷிங்டன், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரங்களுக்கும், மத்திய மேற்குப் பகுதிக்கும், ஹவாய் மாநிலத்துக்கும் அண்ணா செல்வார்.

குடும்பக் கட்டுப்பாடு

குழந்தைகள் எண்ணிக்கையிலா? பிரசவத்தின் எண்ணிக்கையிலா?

குடும்பக் கட்டுப்பாட்டையொட்டி குழந்தைகள் எண்ணிக்கைக்கு உயர்மட்ட அளவு விதிக்கப்பட்டிருக்கிறது; ஆனல், 'ஒரே பிரசவத்தில் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறந்துவிட்டால், அவர்கள், மறுமுறை பிரசவிக்கவே கூடாதா?' என்ற கேள்வி மைசூர் சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் ஒருவரால் எழுப்பப்பட்டது.

"மூன்று குழந்தைகளுக்குமேல் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வினையே நிறுத்த வேண்டும்" என்ற யோசனை பற்றி அக்னிஹோத்ரி என்னும் காங்கிரசு உறுப்பினர்,

"மூன்று குழந்தைகள் உச்சவரம்பு என்பது பொதுவாக மூன்று பிரசவங்களின் மூலம் பெறும் குழந்தைகளைக் குறிக்கிறது; சிலர், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளையும் பெற்ருல், அவர்களைப் பொறுத்தவரையில் இந்த உச்சவரம்பு என்ன ஆவது? எனவே, 'மூன்று குழந்தைகள்' உச்சவரம்பு எனபதற்குப் பதிலாக, 'மூன்று பிரசவங்கள்' என்பதை உச்சவரம்பாகக் கொண்டு வர வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 பங்குனி 3 (16—3—68) சனி

இந்தக் கட்சியா அந்தக் கட்சி?

"ஆந்திரத்தில் மதுவிலக்கை ரத்துசெய்வதென ஆளுங்கட்சியான காங்கிரசு தீர்மானித்துள்ளது. மார்ச் 14-ந்தேதி மாலை நடந்த கூட்டத்தில் இது பற்றிப் பொதுக் கருத்து உருவாகியது. மதுவிலக்கு ரத்து பற்றி ஆந்திர அரசு தனது முடிவை விரைவில் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது."

★

"'மதுவிலக்கை ரத்து செய்ததன் விளைவாகத் தனது நிதி நிலையை மைசூர் அரசு செம்மையாக்கிக் கொண்டுவிட்டது" என, நிதியமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே அறிவித்தார்."

★

"மாராட்டிர மாநிலத்தில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டும் ஒழிக்கப்பட்டும் உள்ளது. குறைந்த அளவு போதைச் சத்துள்ள கள்ளைப் புட்டியிலடைத்து விற்பனை செய்யும் ஏற்பாடு செயலாற்றப்படுகிறது."

★

இம்மூன்று செய்திகளும், காங்கிரசுக் கட்சியினால் கோலோச்சப்பட்டு வருகின்ற ஆந்திரம்—மைசூர்—மகாராட்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களைப் பற்றியதாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று மாநிலங்களில், ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையில் முழு அளவு மதுவிலக்கு இன்றுவரை செயலாற்றப்படவில்லை; அம்மாநிலத்தைச் சேர்ந்த சிற்சில பகுதிகளிலேயே மதுவிலக்கு, சட்டப்படி செயலாற்றப்பட்டு வருகிறது என்றாலும், அவ்வாறு செயலாற்றப்படுவதும் ஏட்டளவில்தான். அத்தகைய ஏட்டளவு மதுவிலக்குக்கும் 'முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும்' என ஆந்திர மாநில காங்கிரசுக் கட்சி இப்பொழுது முடிவு கட்டியுள்ளது.

மைசூர் மாநிலத்திலோ என்றால், முழு அளவு மதுவிலக்கு எப்பொழுதும் செயலாற்றப்பட்டதில்லை. ஆந்திர மாநிலத்தைப் போலவே மைசூரிலும் சில பகுதிகளில்தான் ஏற்கனவே செயலாற்றப்பட்டுள்ளது.

இத்தகைய அரைகுறை மதுவிலக்கையும், 'ஒழித்துக்கட்ட வேண்டும்' என, மைசூர் மாநிலக் காங்கிரசுக் கட்சியும், அமைச்சரவையும் முடிவெடுத்த நேரத்தில், அம்முடிவுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கின்ற முறையில், அப்பொழுது இருந்துவந்த யசோதம்மா தாசப்பா, தமது அமைச்சர் பதவியை உதறித் தள்ளினார். அப்பதவி விலகலையும் பொருட்படுத்தாமல், மதுவிலக்கை ஒழித்துக் கட்டிவிட்டது மைசூர் அரசு.

இப்பொழுது மதுக்கடைகள் மூலம், பெரும் தொகை மைசூர் அரசுக்குக் கிடைத்துள்ளதாகவும், அதன் பலனாக மைசூர் மாநிலத்தில் நிதிநிலை செம்மைபட்டிருப்பதாகவும் நிதியமைச்சர், அங்குள்ள சட்டப் பேரவையில் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

மாராட்டிர மாநிலத்தின் போக்கும், மைசூர் மாநிலத்தை ஒத்திருப்பதேயாகும்.

மைசூர், மாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களால்தான் ஆளப்பட்டு வருகின்றன. அம்மூன்று மாநிலங்களிலும் முதலமைச்சராக இருந்துவருகின்றவர்கள், வெறும் பதவிக்காகக் காங்கிரசுக் கட்சியில் இருப்பவர்களல்லர்; 'பதவி கிடைக்கும்' என்பதற்காகப் புதிது புதிதாகக் காங்கிரசுக் கட்சியில் இடந்தேடிக்கொண்ட புதுமைக் காங்கிரசு பக்தர்களுமல்லர்—அம்மூவரும்; அன்று காங்கிரசு நடத்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பங்கு பற்றியவர்கள்; காந்தியார் காங்கிரசுக் கட்சியிலேயே சேர்ந்து அம்மூவரும் தங்கள் தொண்டினால் தங்களைக் காங்கிரசுக் கட்சியினராக ஆக்கிக்கொண்டவர்கள்.

எனவே, அம்மூவருக்கும், மதுவிலக்கில் காந்தியார் வைத்திருந்த அழுத்தந்திருத்தமான நம்பிக்கை திட்டவட்டமாகத் தெரியாதிருக்க நியாயமில்லை. 'மதுவிலக்கும், தீண்டாமை ஒழிப்பும், காந்தியாருக்கு இரண்டு கண்களாக அமைந்திருந்தன' என்ற உண்மை, அம்மூவருக்கும் தெரியும்.

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்தை விடுவிப்பதில் காந்தியார் கொண்டிருந்த பிடிப்பைவிடக் கூடுதலாக இல்லை என்பதானாலும், அதற்கு ஒத்த அளவுக்கு மதுவிலக்கிலும், தீண்டாமை ஒழிப்பிலும் அவருக்குப் பிடிப்பு இருந்துவந்தது என்பது உலகறிந்த உண்மை. இதன் காரணமாகவே, விடுதலைப் போராட்டத்தில்கூட மதுக் கடைகளை மறியல் செய்வதைக் காந்தியார் இணைத்திருந்தார் என்பதும், அம்மறியல் போராட்டங்களில் பல்லாயிரக்கணக்கானவர் அப்பொழுது பங்கேற்று அதற்கான இன்னல்களை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் வரலாறாகும். மதுக்கடைகளை மறியல் செய்து கொடுந் தண்டனைகளை ஏற்றுக்கொண்டதன் விளைவாகப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த பேராதரவு, ஏற்கனவே ஆட்சிபீடமேறக் காங்கிரசுக் கட்சிக்குப் பேருதவி புரிந்திருக்கிறது என்பதும், இப்பொழுதுகூட அதே ஆதரவு ஓரளவுக்குக் காங்கிரசுக் கட்சி மேற்படி மூன்று மாநிலங்களிலும் பதவியிலிருந்துவருவதற்குத் துணை செய்திருக்கிறது என்பதும் இத்தொடர்பில் கொளளத்தக்கதாகும்.

தமது கண்களுக்குச் சமமாகக் காந்தியார் கருதிவந்த மதுவிலக்கை ஒழித்துககட்டிவிட்டதன் மூலம் மைசூர் மாநிலமும், மாராட்டிர மாநிலமும், மன்னிக்க முடியாத துரோகத்தைக் காந்தியாருக்குச் செய்தவைகளாகின்றன. அந்தத் துரோகப் பட்டியலில் தனக்கும் இடம் பிடித்துக்கொள்ள இப்பொழுது ஆந்திரம் துடித்துக் கொண்டிருக்கிறது.

மதுவிலக்கை ஒழித்துக்கட்டியதன் மூலம் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் காந்தியாருக்குத் துரோகம் செய்துவருவது எப்படியோ இருக்கட்டும். அரசியல் சட்டத்தில் இருக்கின்ற 47-வது விதி, மதுவிலக்கை, செயலாற்ற வேண்டிய உயர்ந்த இலட்சியங்களில் ஒன்றாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இந்த இலட்சியக் கோட்பாட்டுக்கும் கொள்ளி வைத்துவிட்டிருக்கிறது—மைசூரிலும் மாராட்டிரத்திலும் ஆட்சி செலுத்திக்கொண்டுள்ள காங்கிரசுக் கட்சி! ஆந்திரக் காங்கிரசுக் கட்சியும் அதே வழியைப் பின்பற்றி நடைபோட முடிவெடுத்துவிட்டது!

மதுவிலக்கை ஒழித்துக் கட்டியிருப்பதிலும் ஒழித்துக் கட்டுவதிலும் மூன்று காங்கிரசு மாநிலங்களும் முன்னணியில் நிற்கின்ற போக்கை, அங்குள்ள காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கவுமில்லை—எதிர்த்துக் குரல் எழுப்பவுமில்லை! 'அமைச்சர் பதவியிலிருந்து அம்மையார் ஒருவர் விலகிக்கொண்டுவிட்டார்' என்ற அளவுடன், மைசூர் அரசின் மதுவிலக்கு ஒழிப்பு முடிவின் கதை முற்றுப் பெற்றுவிட்டது!

'மதுவிலக்கை ஒழிப்பது பற்றி மாராட்டிரக் காங்கிரசுக் கட்சிக்குள் கருத்து வேற்றுமை கிளம்பியது' என்ற ஆரம்பச் செய்தியுடன், அம்மாநிலத்தில், மதுவிலக்கு ஒழிப்பு நிறைவேறிவிட்டிருக்கிறது!

ஆந்திர மாநிலத்திலோ, மாநிலக் காங்கிரசுக் கட்சியே மதுவிலக்கு ஒழிப்புக்கு அடிப்படையாக இருந்துவருகிறது!

காங்கிரசுக் கட்சியினரின் முழு அளவு நல்வாழ்த்துடன், மதுக் கடைகள் திறப்பு விழா மைசூரிலும், மாராட்டிரத்திலும் நடந்தேறிவிட்டது! இனி ஆந்திரத்தில் அத்திறப்பு விழாக்கள், மாநிலம் முழுவதிலும் நடைபெறக்கூடிய மங்கள நாளை எதிர்பார்க்கலாம்!

காந்தியார் நூற்றாண்டு விழாவுக்கான ஏற்பாடுகளை விரைந்து விரிவாகச் செய்துகொண்டிருககின்ற இந்த நேரத்தில், அவருடைய சீடர்களே மதுக் கடைகளுக்குத் திறப்பு விழா செய்து கொண்டிருப்பது வேதனை கலந்த விசித்திரமாகும்! கள்ளுக்கடைகளை மறியல் செய்து கொடுந்தண்டனைகளுக்கு உள்ளாகியவர்களைக் கொண்ட அந்தக் காலக் காங்கிரசுக் கட்சி எங்கே—மதுக் கடைகளுக்குத் திறப்பு விழா செய்து மதுக் குடிக்கு நல்வாழ்த்துக் கூறி மது அருந்த மக்களை முகமலர்ச்சியுடன் வருந்தி அழைத்துக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக் காங்கிரசுக் கட்சி எங்கே? இதுவா, அது?

—கா. க.

மோகினி - ஊர்வசி - ரம்பை

சட்டமன்றத்தில் நகைச்சுவை!

சென்னை, மார்ச் 15—

சட்டமன்றத்தில், கோயில்களுக்கு வழங்கப்படும் 'மோகினிப் படி' பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

காங்கிரசு உறுப்பினர் விநயகம் எழுந்து, 'மோகினிப் படி' என்றால் என்ன? மோகினி-ரம்பை-ஊர்வசி என்ற பெயர்களிலெல்லாம் படித் தொகை வழங்கப்படுகிறதா?" என்று கேட்டார்.

(சிரிப்பு)

அமைச்சர் மதியழகன் இதற்குப் பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—

"கனம் உறுப்பினர் தமது கற்பனையைக் கேள்வியாகக் கேட்கிறார். 'மோகினிப் படி' என்பது, 19-ம் நூற்றூண்டில் ஏற்பட்டது; அதாவது ஆங்கில ஆட்சிக் காலத்திலிருந்து கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைஎடுத்துக் கொண்டதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை, அந்தக் கோயில்களின் திருப்பணிகளுக்காக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இரங்கநாதசாமி மோகினி வேடத்தில் வந்ததால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது."

கேள்வி:—"சீரங்கம் இரங்கநாத சாமி மோகினி வேடத்தில் வந்ததால், வைஷ்ணவக் கோயில்களுச்கு மட்டும் இந்த மானியம் வழங்கப்படுமா?" (சிரிப்பு)

அமைச்சர் கருணாநிதி:—"பெருமாள் பெண் வேடம் போட்டு மயக்கியது சிவனைத்தான்! ஆகையினால் சிவன் கோயில்களுக்கும் கொடுக்கலாம்!"

(சிரிப்பு)

சீரமைப்பு மூலம் ரூ. 11 இலட்சம் மிச்சம்

புதுடில்லி, மார்ச் 16—

"திட்டக் குழுவின் பணிகளைச் சீரமைத்ததன் மூலம்-குறிப்பாக 77 பதவிகளை நீக்கியதன் மூலம் ரூ 11 இலட்சம் மீதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது"

என்று தலைமையமைச்சர் இந்திரா, மாநிலங்களவையில் தெரிவித்தார்.

அரசுப் போக்குவரத்தில் ஏற்படும் இழப்பு

வெளியூர் பஸ்களை அதிகரிப்பதன் மூலம் ஈடுசெய்யப்படும்

சட்டமன்றக் கேள்விகட்கு மு. கருணாநிதி பதில்

சென்னை, மார்ச் 15—

"அண்டை மாநிலத்தில் பஸ் போக்குவரத்து மூலம் கோடிக் கணக்கில் இலாபம் வருகிறது; இந்த மாநிலத்தில் மட்டும் நஷ்டம் வருவதேன்?"

என்று இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. வரதராசன் கேட்ட கேள்விக்கு, பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி பின்வருமாறு பதிலளித்தார்:—

"உறுப்பினர் 'அண்டை மாநிலம்' என்று சொன்னார்; அதன் பெயரைச் சொல்லவில்லை; கேரள மாநிலத்தைத்தான் அவர் மனத்தில்கொண்டு சொன்னார் என்று கருதுகிறேன். அவர் சொன்னதுபோல் அங்கே கோடிக் கணக்கில் இலாபம் கிடைக்கவில்லை--இலட்சக்கணக்கிம்தான் கிடைக்கிறது.

"கேரளத்தில் நகரப் பகுதியில்—அதாவது திருவனந்தபுரத்தில் 130 பஸ்கள்தான் ஓடுகின்றன; வெளியூர்களில் ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடுகின்றன. வெளியூர்களுக்கு நூற்றுக் கணக்கிலும், சென்னை நகரில் ஆயிரக்கணக்கிலும் பஸ்கள் ஓடுகின்றன. நகரப் பகுதியில் ஓடும் பஸ்களினால்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்; மேலும், நஷ்டத்தைத் தவிர்க்க அரசு குழு அமைத்து ஆராய்ந்து கொண்டிருக்கிதது."

திரு. ஹண்டேயின் கேள்விக்குப் பதிலளிக்கையில், பம்பாயில் பஸ் போக்குவரத்து இலாபத்தில் நடக்கவில்லை என்றும், தாமே சென்ற ஆண்டு நேரில் பம்பாய் சென்று பம்பாப் மேயரைச் சந்தித்த நேரத்தில் கோடிக்கணக்கில் அங்கு நஷ்டம் ஏற்படுவதாக மேயர் கூறியதாகவும், இங்கு இலட்சக்கணக்கில்தான் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விளக்கினார்.

"வெளியூர் பஸ்களை அதிகரிப்பதன் மூலம் நஷ்டம் ஈடு செய்யப்படும்" என்றார் அமைச்சர்.

அரசினரே பாட நூல் வெளியிடும் திட்டம்--படிப்படியாக நிறைவேற்றப்படும்

காலதாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை-அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 15—

"பள்ளிப் பாட நூல்களை அரசினரே வெளியிடும் திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப் படும்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் அறிவித்தார்.

தற்போது ஏழாம் வகுப்புக்குரிய தமிழ், ஆங்கிலப் பாட நூல்களை அரசு வெளியிடுகிறது என்றும், அடுத்த ஆண்டு எட்டாம் வகுப்புக்குரிய தமிழ் ஆங்கில பாட நூல்களையும் வெளியிடும் என்றும் அவர் கூறினார்.

பல்வேறு கேள்விகட்கும் அமைச்சர் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:—

"தனியார் துறையினர் வெளியிடும் நூல்கள் குறித்த காலத்தில் கிடைக்கத்தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். காலதாமதத்தைத் தவிர்க்குமாறு தனியார் துறையினரை கல்வித் துறை இயக்குநர் வற்புறுத்தியுள்ளார்.

ஒரேயடியாக எல்லாப் பாட நூல்களையும் அரசே வெளியிட முனைந்தால், அதற்குத் தேவையான பணமும், பிற வசதிகளும் வேண்டும்; மேலும், அதனால் காலதாமதமும் ஏற்படும். மெல்ல மெல்ல, தேவையான வசதிகளையெல்லாம் தேடிக் கொண்டுதான் படிப்படியாக இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

தனியார் துறைப் புத்தகம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டாலோ அல்லது வேறு வகை குறைபாடுகள் இருந்தாலோ, அந்தப் புத்தக வெளியீட்டாளருக்கு அடுத்த ஆண்டு வாய்ப்புக் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாட நூல்களில் தவறுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளத்தான் பாட நூல் ஆய்வுக் குழு இருந்துவருகிறது. 'பாட நூற்கள், பாடத் திட்டப்படிதான் வெளியிடப்பட வேண்டும்' என்று விதிகள் இருக்கின்றன; விதிமுறைக்கு மாறுபட்டு தவறு ஏதேனும் இருக்குமானால், அதைக் குறிப்பிட்டுக் காட்டி

(3-ம் பக்கம் பார்க்க)

'பழி வாங்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை'

'யூகங்களை வெளிப்படுத்தி மிரட்சி உண்டாக்க வேண்டாம்'

உள்ளாட்சிமன்றங்களில் கழக ஆட்சி காத்துவரும் சனநாயகம்-- அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, மார்ச் 13—

"ஊராட்சி—ஊராட்சி ஒன்றியங்களின் ஊழியர்கள் அச்சமின்றிப் பணியாற்றும்போது—இந்த அரசும் அச்சமில்லாதவகையில் செயல்படும்போது, 'பீதி ஏற்பட்டிருக்கிறது' என்றெல்லாம் பேசுவது வருத்தந்தரத்தக்கதாகும்.

"இந்தத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதி சரிவரச் செலவிடப்பட வில்லை என்று கூறினர்கள்; நல்ல முறையில்—முறையாக அந்த நிதி செலவிடப்பட்டிருக்கிறது!

"1968-ல் தொகை அதிகம் ஒதுக்கப்படவில்லை என்று கூறியிருப்பது, அவசரத்தால் கூறப்பட்ட வார்த்தையே தவிர, உண்மையல்ல! ஊராட்சிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்படவில்லை!"

இவ்வாறு சட்டமன்றத்தில், சமுதாய வளர்ச்சி—உள்நாட்டு வளர்ச்சி—பொதுப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"நாட்டில் அரசியல் மாறுதல் ஏற்பட்டு ஆட்சிப் பொறுப்பிலும் மாறுதல் ஏற்பட்டிருந்தாலும், ஊராட்சி—ஊராட்சி ஒன்றியங்களில் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக நீண்டகாலமாக இருந்துவருகிற நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட ஊராட்சிகளும்—ஊராட்சி ஒன்றியங்களும், 'கலைக்சப்பட்டுவிடும்' என்ற அச்சம் இருந்து வந்தது; ஆனால், எந்த ஊராட்சியும் அப்படிக் கலைக்கப்படவில்லை; அந்தந்த மன்றங்களின் தலைவர்களோடு கலந்து பேசப்பட்டது—அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. இப்போது காரியங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றுவருகின்றன.

'தலைவர்களும் ஊழியர்களும், பயத்தையும் பீதியையும் தேக்கிக்கொண்டிருக்கிறார்கள்' என்பது, மனத்தில் பீதியைத் தேக்கிக் கொண்டவர்களின் பேச்சே தவிர, உண்மை நிலை அப்படியில்லை.

'இன்னின்னருக்குத் தொல்லை ஏற்படும்' என்று தாங்களாகவே யூகங்களைத் தெரிவிப்பது, 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்கிற அளவுக்கு வெறும் மிரட்சி நிலையே தவிர, அப்படிப் பேசுவது உண்மையல்ல! அடிப்படையை வைத்துப் பேசுவதுதான் பழுத்த அரசியல்வாதிகளுக்கு தேவையான ஒன்றாகும்!

மக்களிடமிருந்து வரியாக வசூலிக்கப்படும் பொதுப் பணத்திலிருந்து அரசியல் கட்சியைச் சார்ந்த சிலர் சலுகை பெற்று வருகிறார்கள்! 'அவர்கள் விரட்டப்படுவார்களோ' என்ற அச்சம் சிலருக்கு இருக்கிறது! உண்மையில், அந்த முறையில் பழிவாங்கும் நோக்கம் இந்த அரசுக்கு நிச்சயம் இல்லை! இருந்திருந்தால், முன்பே அதைச் செய்திருப்போம்! மனிதாபிமான உணர்வோடுதான் இன்னும் வைத்திருக்கிறோம்!"

தமிழ் நாடகக் கலைக் குழு

ஆர்.என்.லிங்கராஜ் நியமனம்

வட சென்னை தியாகராயர் கல்லூரியின் தமிழ்க் கலைத் துறைத் தொண்டில் உறுதுணையாக இருந்து பணியாற்றுபவரும் நாடகக் கலை வளர்ச்சியில் பேரார்வம் காட்டி உழைப்பவருமான தோழர் ஆர். என். லிங்கராஜ் தமிழக அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள தமிழக நாடகக் கலைத்துறை ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டை தொழிலாளர் நலக் குழு

"17—3—68 காலை 10-மணியளவில், மேற்படி குழுக் கூட்டம் பாடி கிராமத்தில் நடைபெறும்; அதுபோது, நடைபெறவிருக்கும் தொழிலாளர் மாநாட்டின் செயல்முறைகள் பற்றிய பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்று குழுச் செயலாளர் சி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

ஸைரப்பர் சிறந்த மோட்டார் உறுப்புகள்

பியட் 1100, ஹிந்துஸ்தான் அம்பாஸிடர்/லாண்ட்மாஸ்டர் கார்களுக்கும், பார்கோ, அசோகலேலாண்ட் பஸ்/லாரிகளுக்கும் உகந்தரப்பர் உறுப்புகள் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்த உறுப்புகளுடனும் விநியோகிக்கப்படுகின்றன.

செயற்கை ரப்பரிலிருந்து உருவாக்கப்பட்ட ஸைரப்பர் உறுப்புகள் நீடித்து உழைக்கும்.



TVS SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ரப்பர் யூனிட், மதுரை 7

3060

மணி -- சாமி குழுவினரின்

கலை நிகழ்ச்சிகள்

மார்ச் 16: சிந்தாமணி (திருச்சி); 17: பழைய நெய்வேலி; 19: பெண்ணாடம்; 20: திருக்கோயிலூர்; 21: இராசபாளையம்; 22 முதல் 24-வரை குமரி மாவட்டம்—நெய்யூர்; 23: முளகுமேடு; 25: இராசபாளையம் 11-வது வட்டம்; 26: சேத்தூர்: 27: நத்தம் (மதுரை); 28: கன்னியப்பபிள்ளைபட்டி; 29: மதுரை (வைகாரா); 30, 31: குடந்தைப் பகுதி.

முகவரி:—மணி - சாமி, தி.மு.க. கலைக் குழு, மு. க. படிப்பகம், இராசபாளையம், முகவை மாவட்டம்.

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு

(மாநில வீட்டு வசதி ஆயத்தின் சார்புடையது)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 21/67-68

திருச்சி—பீச்சாங்குளம் பகுதியில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட தனி ஒப்பந்தப் புள்ளிகள் 10—4—1968 மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் சேரும்படியாக வரவேற்கப்படுகின்றன.

ஒரு டெனமெண்டல் பிளாக்கில் நான்கு இரண்டடுக்குக் கட்டிடம் கட்டுதல்

தொகுதி XII முதல் XXI வரை

வேலையின் தோராய மதிப்பு	ரூ 35,600	(ஒவ்வொரு தொகுதிக்கும்)
பொறுப்புத் தொகை	ரூ. 540	,,

ஒப்பந்தத் தொடர்பான விவரங்களை, ஒவ்வொரு தொகுதிக்குமான செட் ஒன்றுக்கு ரூ. 5-ம், விற்பனை வரி 3 சதவிகிதமும் (திரும்பப்பெற முடியாதது) செலுத்தி, வட்டாரக் கணக்கரிடம் (Divisional Accountant) 18--3--1968 முதல் 9--4--1968 முடிய எல்லா வேலை நாளிலும் காலை 11 மணி முதல் மாலை 4 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

பெற்றுக்கொள்ளப்படும் இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 3.15 மணிக்குத் திறந்துபார்க்கப்படும்.

சர்ச்யூட் ஹவுஸ் ரோடு,
திருச்சி-1

ஆர். வெங்கடாச்சார்,
நிர்வாகப் பொறியர் & நிர்வாக அதிகாரி

புகழ்பாடுவோர்--பூட்சு துடைப்போருக்குத்தான் சலுகையா?

அக்கரைச் சீமைக்குப் போவதுபற்றி காங்கிரசு உறுப்பினரின் அக்கறை!

"வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் நாடாளுமன்றத் தூதுக் குழுக்களில், பெரிய இடத்தில் உள்ளவர்களை 'முகஸ்துதி' செய்பவர்களுக்கும் அவர்களது பூட்சுகளுக்குப் 'பாலிஷ்' போடுபவர்களுக்கும்தான் இடம் கொடுக்கப்படுகிறது; நேர்மையான முறையில், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை"

என்று மக்களவையில், காங்கிரசு உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டிப் பேசியுள்ளார்.

"அரசு அனுப்பும் தூதுக் குழுக்களுக்கான உறுப்பினர்கள், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்" என்பது பற்றிய விவாதத்தின் போதுதான் காங்கிரசு உறுப்பினர், மேற்கண்டவாறு வருத்தம் தெரிவித்துப் பேசியிருக்கிறார்.

"தகுதி—திறமை ஆகியவற்றைப் பார்த்துத்தான் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; சலுகைகளினுல் அல்ல"

என்று மறுப்பு தெரிவித்த தலைமை அமைச்சர் இந்திரா, குற்றஞ்சாட்டிய உறுப்பினரின் 15 ஆண்டுக் கால மக்களவை அனுபவத்தில், இதுவரை ஒருமுறைகூட எந்த விதத் தூதுக் குழுவிலும் இடம் பெருததுபற்றி வியப்புத் தெரிவித்ததுடன், அடுத்த தடவை வெளிநாடு செல்லும் தூதுக் குழுவில் அவருக்கு இடமளிக்க ஆவன செய்வதாகவும் கூறினர்.

வானொலி நாடகம்

'நடுமலை மாதய்யன்'

தமிழக—மைசூர் மாநில எல்லையில் அடர்ந்த மலைப் பகுதியில் கோயில் கொண்டு, வெகுசன மதிப்பும் விழாச் சிறப்பும் பெற்றவர் நடுமலை மாதய்யன்.

அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி—அரும்பசி எவர்க்கும் ஆற்றி—மனத்துலே பேதம் நீக்கி—ஐம்புலம் வென்று—ஆன்ம பலத்தால் தெய்வ நிலைக்கு உயர்ந்திட்ட இந்த வீர சைவ போகியின் வரலாற்றினை ஆசிரியர் சலகை ப. கண்ணனுர் ஒரு மணி நாடகமாகப் படைத்துள்ளார்.

திரு. எஸ். எஸ். பரமசிவம் இசையமைப்புடன்—திரு. டி. வி. கிருஷ்ணமூர்த்தி தயாரித்தளிக்கும் 'நடுமலை மாதய்யன்' நாடகம், திருச்சி வானொலி நிலையத்திலின்றும் 17—3—68 பிற்பகல் 3-30 மணிக்கு ஒலிபரப்பாகிறது; இதனை சென்னை நிலையமும் அஞ்சல் செய்கிறது.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

மார்ச் 17: மதுரை; 18: நாகப்பட்டினம்; 19: மதுரை (12-வது வட்டம்); 24: சிவகாசி; 31: பேராவூரணி; ஏப்ரல் 1: திருவாடனை; 2: மணக்காடு; 3: நெய்வேலி; 5: ஈரோடு; 7: உதகை; 11, 12: சென்னை; 14: பெங்களூர்; 15: வரட்னப்பள்ளி; 21: குடந்தை.

அரசினரே பாட நூல்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாட நூலில் இருக்கக் கூடாத கருத்துக்கள் இருக்குமானல் அதை நீக்கவோ திருத்தவோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

வெளிநாட்டிலிருந்து நன்கொடையாகப் பெறப்படும் காகிதங்களைக்கொண்டு பாட நூல்கள் அச்சிடப்பட்டு ஓரளவு ஏழை மாணவர்கட்கு இலவசமாக வழங்கும் ஏற்பாடு இப்போதே இருந்துவருகிறது."

அ. பொன்னம்பலனர்

இரங்கற் கூட்டம்

சென்னை மாவட்ட சுயமரியாதை இயக்கச் சார்பில் 17—3—68 பிற்பகல் 2-மணியளவில், மறைந்த பூவாளுர் அ. பொன்னம்பலனர் இரங்கற் கூட்டம், சென்னை கோகலே மண்டபத்தில் கு. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்; உருவப் படத் திறப்பு: பா. குருசாமி; கவிஞர்கள் பலர் இரங்கற் பாடுவர்; பேசுவோர்: தி. போ. வேதாசலனர், சோ. இலட்சுமிரதன் பாரதி, கே. டி. கே. தங்கமணி, மற்றும் பலர்.

தங்கத்தைத் தேடி...!

இயற்கை கொடுத்திருக்கும் 'தங்க'த்துக்கும்—மனிதன் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நாணயத்துக்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு தகுதிப் போட்டிதான், நேற்றும் இன்றும் செய்தித்தாள்களின் இடங்களைப் பெரும் அளவில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இலண்டன்—வாஷிங்டன் நகரத்துத் தகவல்கள்!

டாலரும் ஸ்டர்லிங்கும் மதிப்பிழந்துவிடாமல் பாதுகாப்பதற்குக் காட்டப்படும் முயற்சிகள் அத்தனையும் பற்றிய விவரங்கள்தான், ஐரோப்பிய—அமெரிக்க பங்கு—மூலதனச் சந்தைகளில் காட்டப்படும் பரபரப்பு!

பாங்கித் துறையில் தனிப் பெருமைகள் சிலவற்றைப் பெற்றிருக்கும் சுவிட்சர்லாந்து நாட்டுச் செய்தி ஒன்றின்படி தெரியவரும்

"டாலரில் இருந்த நம்பிக்கை குறைந்துவிட்டது"

என்ற நிலைமை மட்டும் உண்மைதானென்றால், மனிதனை தங்கம் வென்றுவிடும்!

'உலக நாணய முறையே நிலை நின்றுவிடும்' என்று பயப்படும் அளவுக்குக் கடந்த சில நாட்களாக ஐரோப்பிய மார்க்கெட்டுகளில்—குறிப்பாகவும் சிறப்பாகவும் வாஷிங்டன், இலண்டன் நகரத்து மூலதன—பங்கு சந்தைகளில், தங்கத்தைத் தேடிப் புயல் வேகத்தில் யூகம் உயர்ந்தது!

பொதுவாக, உலகின் முக்கிய நாணயங்களுக்குள்தான் இத்தகைய திடீர் உயர்வுகள் தோன்றும்! ஸ்டர்லிங், மதிப்பு இழந்துவருவதை முன்கூட்டி உணர்ந்த சில சாமர்த்தியசாலிகள், டாலரைத் தேடி பறந்தது, இதற்கு ஓர் உதாரணமாகும்.

ஆனால் இப்போது ஸ்டர்லிங்—டாலர் இரண்டும், நாணயத் துறைக்கே முதுகெலும்பான தங்கத்தைத் தேடிப் பறந்துகொண்டிருக்கின்றன!

'மூலதனச் சந்தையில் டாலருக்கு மதிப்பு குறைகிறது' என்று உணரப்பட்ட ஓர் அச்ச நிலை, தங்கத்தைத் தேடித் திரிவதற்கான திருப்பத்தைக் கொடுத்திருக்கிறது!

சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் விளக்குவதென்றால், 'பாங்கி திவாலாகிவிடுமோ' என்று அதன் வாடிக்கைக்காரர்களிடையே ஏற்படும் ஒரு பீதி நிலைக்கு இதனை ஒப்பிடலாம்!

ஒரு நேர்மையான பாங்கர் அந்த நேரத்தில் எடுக்கும் முயற்சிகளைத்தான், அமெரிக்கா இப்போது எடுத்து வருகிறது!

'டாலர், மதிப்பு இழந்துவிடவில்லை' என்பதனை உறுதிப்படுத்துவதற்கு, தேவைப்படும் தங்கத்தினை, தங்கு தடையின்றி வெளியிட்டுக் கொண்டிருக்கிறது!

'திவால்' என்ற வதந்தியினைக் கேட்டு, பெருக்கெடுத்துவரும் வாடிக்கைக்காரர்களின் 'செக்'குகளுக்குத் தேவைப்பட்ட தொகையினைக் கொடுத்து, பாங்கியின் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தும் பாங்கரைப்போல், தங்கத்துக்கு வந்திருக்கும் இந்த திடீர்த் திருப்பத்தினால், 'டாலர் மதிப்பு வீழ்ந்துபடவில்லை' என்பதனைக் காட்ட :'ஓர் அவுன்சு தங்கத்தின் விலை 35 டாலர்' என்ற அடிப்படையை, நொடிக்காமல் காத்து நிற்கிறது அமெரிக்கா!

தங்கத்தின் திடீர் கிராக்கிக்கு ஈடுகொடுக்கும் டாலருக்குக் கவசமாகத் தனது இருப்பில் உள்ள 11,400 மில்லியன் டாலர் பெறுமான தங்க இருப்பினை, தேவையைச் சமாளிக்க வெளியிட்டுக்கொள்ளும் தனி அதிகாரத்தினைச் செனட்டிடம் கேட்டுப் பெற்றிருக்கிறது—அமெரிக்க நிர்வாகம்!

'1929-க்குப்பின், இது இரண்டாவது முறை' எனக் கூறப்படும் பாங்கி விகிதத்தினை 4.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதன்மூலம், 'டாலர்' நாணயத்துக்குப் பங்கு மார்க்கெட்டுகளின் 'கவனத்தை' ஏற்படுத்தியிருக்கிறது, வாஷிங்டன்!

'தங்கத்தைத் தேடிப்போகும் டாலர் திரும்பிவரும்' என்ற உறுதியைக் கொடுக்கவே இந்த மற்றொரு செயற்கை நடவடிக்கை!

'உலக நாணயச் சந்தையின் முதல் பெரும் கூட்டாளிகள்' என்ற அடிப்படையில்—அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிணங்க இலண்டன்—தனது தங்க மார்க்கெட்டுக்கும், பாங்கி நிறுவனங்களுக்கும் கட்டாய விடுமுறை கொடுத்து, குழப்ப நிலையை மக்கள் அளவில் மேலும் வளரவிடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறது!

இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யும் ஐரோப்பிய வியாபாரிகள், விலைப் பட்டியலை வழக்கமாக ஸ்டர்லிங் நாணயத்தில் கேட்பதற்குப் பதிலாக, ஏற்கனவே தேய்ந்திருக்கும் ரூபாய் நாணயத்தில் கேட்கும் அளவுக்கு டாலர்—ஸ்டர்லிங் நாணயத்தின் மதிப்பு நொடித்திருக்கிறதெனில், அமெரிக்காவிலும் இலண்டனிலும் தங்கத்துக்கு இருக்கும் 'பசி'யினைக் கற்பனை செய்துதான் பார்க்கவேண்டும்!

அரசியலிலேயே மூழ்கித் திளைக்கும் நாளிதழ்களில், திடீரென, 'தங்கம்—டாலர்' எனச் செய்தி வருவதால், 'இது, அரசியலுக்கு முற்றிலும் அப்பாற்பட்ட பிரச்சினை' என்று எவரும் கருதிவிட வேண்டாம்!

அனைத்துக்கும் அடிப்படை, அரசியலே! அது, இதற்கு மட்டும் விதிவிலக்காக அமைய முடியுமா?

அமெரிக்க அரசின் நிதிநிலை—வரி இனங்கள்—வியட்நாம் கொள்கையினால் வீணாகும் பொருள்—ஆகியனவற்றின் தொடர்ச்சியான காரணம்தான் இந்த நிலை!

தங்கத்தைத் தேடிப்போகும் இந்தப் பரபரப்பிலும், அரசியல், இடையில் வந்து சிக்காமல் இல்லை!

மேற்கு நாடுகளின் முன்னாள் கூட்டாளியான பிரான்சு, டாலருக்கும் அதன் பயனாக ஸ்டர்லிங்குக்கும் நேர்ந்துவிட்ட இந்தக் 'கதி'யினைப் பார்த்து, 'இதுவும் வேண்டும்—இன்னும் வேண்டும்' என்ற நினைப்பில் இருப்பதாகத் தெரிகிறது!

அமெரிக்க டாலருக்கு முட்டுக்கொடுக்கும் பிரிட்டனின் தோழமை உணர்ச்சியில், இங்கிலாந்தின் முக்கியத் தூணான ஜார்ஜ் பிரவுன், வேறுபட்டு நிற்கிறார்! 'பதவி விலகல்' என்ற 'விஷப் பரீட்சை'யும் நடந்திருக்கிறது!

"மனிதனின் 'நாணயம்' வெல்லப்போகிறதா? அல்லது இயற்கையின் 'நாணயம்' வெல்லப்போகிறதா?" என்பது, டாலருக்கும்—தங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கிற சிக்கலை விடுவிக்கவிருக்கும் அமெரிக்காவின் கையில்தான் இருக்கிறது!

—எஸ். ஆர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ்நாடு சிறப்பு ஊதிய நடைமுறை விதியினையொட்டி, உதகையில் வேலைக்கமர்த்தப்பட்ட பரிசோதனை ஆய்வாளர்களுக்கும் நோக் கண்காணிப்பாளர்களுக்கும் மலைப் படி வழங்க அண்மையில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1—2—66 முதற்கொண்டே இந்தப் படியைக் கொடுக்குமாறு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு நிகராடை உடுத்தக் கதர்த் துணி அளிக்கப்பட்டு வந்தது; கதர்த் துணி நீடித்து உழைக்காமையால் அதற்குப் பதிலாக நிகராடைகள் தைத்துக்கொள்ள கைத்தறித் துணி வழங்க வேண்டுமென்று அவர்கள் முறையிட்டனர்; தொழிலாளர்கள் விரும்பியவாறே நிகராடைகள் தைத்துக்கொள்ள கைத்தறித் துணி அளிக்க அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. போக்குவரத்து, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் தையல் கூலித் தொகை தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 10-லிருந்து ரூ. 12 ஆக உயர்த்தப்பட்டது.

சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் அளிக்கப்படும் காவலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஓராண்டுக்கு வழங்கப்பட்டு வந்த இரண்டு தொகுதி நிகராடைகளுக்குப் பதிலாக மூன்று தொகுதி நிகராடைகளுக்கான உடை வழங்க 1967 ஜூலையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஆண்டுதோறும் மூன்று தொகுதி நிகராடைகளும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பூட்சுகளும், ஓட்டுநர் பயிற்சியளிப்பவர்களுக்கு வழங்க 1968 சனவரியில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆண்டு ஒன்றுக்குத் தையற் கூலி அளிக்க ரூ. 10-ம், மாதம் ஒன்றுக்குச் சலவைப் படியாக ரூ. 3-ம் ஓட்டுநர் பயிற்சியளிப்பவர்களுக்கு வழங்க அரசு ஒப்பளித்தது.

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பூட்சுகள் வழங்குவதற்குப் பதிலாகப் போக்குவரத்து—தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஓரளவு மூடிய பத்தாணி வகை செருப்புகள் வழங்க அரசாங்கம் ஒப்பளித்துள்ளது.

தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்து ஊழியர்கள், பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தின் அலுவலகம் செயல்பட போக்குவரத்து இல்லத்தில் ஓர் அறை வாடகையின்றி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

17--3--68

திண்டுக்கல்

6-வது வட்ட அண்ணா மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மேற்கு ரத வீதியில்; தலைவர்: என். முத்து; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., பெ. ஜீவானந்தம், வி. ஈ. பாலு.

கோவில்பட்டி

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 7-மணிக்கு காந்தி மைதானத்தில்; தலைவர்: க. முத்தையா; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம். ஆர். சனார்த்தனம் பி.எஸ்சி., நெல்லை நெடுமாறன், யு. எம். சாமி, இரா. நம்பிராசன், த. மாறன்.

கூறைநாடு—மாயூரம்

அறிஞர் அண்ணா படிப்பக 3-வது ஆண்டுவிழா; மாலை 6-மணிக்கு ஆராயத் தெருவில்; தலைவர்: ஆர். சண்முகம்; பேசுவோர்; பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., மன்னை ப. நாராயணசாமி, என்.கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., அ. செங்குட்டுவன். (பகல் 1-மணிக்கு அண்ணா படிப்பகத்தில் கஞ்சி வழங்கப்படும்).

குடந்தை

24-வது வட்டார வள்ளுவர் படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு செட்டிப் புதுத் தெருவில்; தலைவர்: அ. ந. ரெங்காச்சாரி; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, எஸ். ஆர். இராதா எம்.சி., எஸ். கோதண்டராமன் பி.காம்., பி.எல்., பி. வி. செயராமன் எம்.ஏ., எம்.சி., ப. நாகராசன், சி. பா. ரெங்காச்சாரி, கோவி. நாராயணசாமி.

சென்னை 1-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தண்டையார் பேட்டை மணிக்கூண்டு அருகில்; தலைவர்: மு. மாரிமுத்து; பேசுவோர்: நீலநாராயணன், இளம்பரிதி, ஆர். ஆறுமுகம் எம்.சி., எம். மோகனரங்கம் எம்.சி., டி. வேணுகோபால் எம்.சி., டி. கோவிந்தசாமி, மற்றும் பலர். (பிற்பகல் 3 மணியளவில் ஊர்வலம் நடைபெறும்)

குடியேற்றம்

நகர எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் தலைமைச் செயலகத்தின் சார்பில் மாலை 6-30 மணிக்கு குளக்கரையில்; தலைவர்: மு. க. மெய்ஞானம்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., மற்றும் பலர். (மாலை 5-மணிக்கு புதுப்பேட்டை திலகர் வீதியில் மேற்படி மன்றத் தலைமைச் செயலகத்தை எஸ். சரவணன் தலைமையில் புலவர் பொன்னிவளவன் திறந்துவைப்பார்).

சமயநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு ஆர். சி. தெருவில்; தலைவர்: செ. இருதயசாமி; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., வி.எம். துரைராசு, கே. இராசு, எஸ். நாகராசன், வி. நல்லமணி.

இச்சிப்பாளையம்

25-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பிரசவ விடுதி அருகில்; தலைவர்: பெ. இராசமாணிக்கம்; பேசுவோர்: ஆ. அண்ணாமலை, ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., கே. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. மாரியப்பன் எம்.சி., கே. பி. சாமி, க. சித்தன், மற்றும் பலர்.

நெய்வேலி

50-வது வட்ட திடீர்நகர் அண்ணா மன்ற முதலாவது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு என். எஸ். கே. திடலில்; தலைவர்: ஏ. வி. தண்டபாணி; பேசுவோர்: காஞ்சி. கல்யாணசுந்தரம், வே. கிருட்டினமூர்த்தி எம்.பி., எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எம். செல்வராசு, மாறன் வழுதி, எஸ். சீத்தாராமன்.

18--3--68

சென்னை 28-வதுவட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஆதியப்பநாயக்கன் தெருவில்; தலைவர்: என். எஸ். கிருஷ்ணசாமி; பேசுவோர்: கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஏ. கே. அப்துஸ் சமது எம்.பி., ஜீவா கலைமணி பி.ஏ., எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., என். வீராசாமி எம்.எல்.ஏ.

நாகப்பட்டினம்

தி. மா. மு. க. துவக்கவிழா; மாலை 6-30 மணிக்கு அபிராமியம்மன் திடலில்; தலைவர்: எச். பாஸ்கர்; பேசுவோர்: கா. காளிமுத்து பி.ஏ., மு. காஜா முகைதீன், இரா. இராமலிங்கம், ப. இராமன், இராமமூர்த்தி, கோவி. இளம்பரிதி, இரா. செல்வன், மற்றும் பலர்.

19--3--68

சென்னை—பேசின்பிரிட்ஜ்

பகுதி தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு 22-வது வட்டம் மன்னப்ப முதலி தெருவில் (தியாகராயர் உயர்நிலைப் பள்ளி அருகில்); தலைவர்: து. கோவிந்தசாமி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., துணை மேயர் பவளவண்ணன், இளம்பரிதி, ஜீவாகலைமணி பி.ஏ., அரு. செல்லம்பாயிரம் பி.ஏ., சு. கஸ்தூரி பி.எஸ்சி., பி.எல்., ம. மோகனரங்கம் எம்.சி., து. வேணுகோபால் எம்.சி., ஆர். ஆறுமுகம் எம்.சி., மற்றும் வட்டச் செயலாளர்கள்.

சிவகாசியில் சிறப்பு நிகழ்ச்சி

சிவகாசி எம். ஜி. ஆர். மன்ற வளர்ச்சி நிதிக்காக 17—3—68 மாலை 7-மணிக்கு நகராட்சி பூங்காவிற்கு எதிரிலுள்ள காரநேசன் காம்பவுண்டில் சிறப்புக் கூட்டமும்—கலை நிகழ்ச்சியும் நடைபெறும்; தலைவர்: பி. சுப்பையா; சிறப்புரை: சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., துரை. முருகன் எம்.ஏ. (பானு குழுவினரின் 'புதிய ஆட்சி' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்; நன்கொடை: ரூ. 2; 1; 50 காசு; 25 காசு.)

தேசிய மயமும் நயமும்!

சென்னை, மார்ச் 15—

"அரசுப் போக்குவரத்து கஷ்டமில்லாமல் இயங்கமுடியவில்லை என்றால், அரசு பஸ்களை ஓட்டுவதைவிட, ஓட்டாமலே இருந்துவிடலாமே"

என்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விநாயகம் கேட்டார்.

அதற்குப் பொதுப் பணியமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பதிலளிக்கையில்,

"திரு. விநாயகம் அவர்கள் கேள்வி, தேசியமயமாக்கும் கொள்கைக்கே முரணாக உள்ளது; இது அவரது சொந்தக் கருத்தா—அவருடைய கட்சியின் கருத்தா என்பது புரியவில்லை"

என்று கூறினார்.

பின்னர், திரு. விநாயகம் அவர்கள் எழுந்து, ஒரு விளக்கமளிப்பதாகக் கூறி பின்வருமாறு தெரிவித்தார்:—

"நான் கேட்ட கேள்வி, தேசியமயக் கொள்கைக்கு எதிர்ப்பானதல்ல; 'நட்டத்துக்குப் பஸ்களை ஓட்டுவதைவிட ஓட்டாமல் இருந்துவிடலாமே' என்றுதான் கேட்டேன். தேசியமயமாக்கும் கொள்கைக்கு நானோ, என் கட்சியோ எதிராக இல்லை; எங்கள் கட்சிதான் பஸ்களைத் தேசியமயமாக்கியது."

அமைச்சர் கருணாநிதி:—"திரு. விநாயகம் அவர்கள், 'பத்திரிகையில் செய்தி வந்துவிடுமோ' எனப் பயந்து இந்த விளக்கத்தைத் தந்துள்ளார்; அதற்காக நன்றி.

"அவர் கட்சிதான் பஸ்களை தேசியமயமாக்கியதாகக் கூறினார்; இப்போதுதான் உண்மையான தேசியமயம் ஆகியிருக்கிறது. அவர்கள் கட்சி, 'தேசியமயம்' என்ற பேரால் செய்தது கொஞ்சம் 'நயம்'—அவ்வளவுதான்!"

ஜி. என். இராசு குடும்ப நிதிக்கு இன்னிசை நிகழ்ச்சி

கோவை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் ஜி. என். இராசு அவர்களின் குடும்ப நிதிக்காக 19—3—68 பிற்பகல் 2-30 மணியளவில் அந்தியூர் சீதாலட்சுமி தியேட்டரில் இ. எம். நடராசன் எம்.எல்.ஏ. தலைமையிலும்—பி. ஏ. சாமிநாதன் எம்.பி. முன்னிலையிலும் யு. ஆர். ஜீவரத்தினம் குழுவினரின், 'அண்ணாவின் ஆட்சியின் சாதனை' எனும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்; நன்கொடை: ரூ. 10; 5; 2; 1.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.